


# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்




கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே சகல
ஞானத்தோடும் பரிபூரணமாக வாசமாயிருப்பதாக
*கொலேசெயர் 3 : 16*

மரம் 1 டிசம்பர் 2000 கனி 1

ஆசிரியர்
B. அர்ஜுனன்

## ஆசிரியர் கடிதம்

10.12.2000

*வாசகர்களுக்கு,*

ஆதியும் அந்தமுமான ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்கள் யாவருக்கும் அன்பின் வாழ்த்துக்கள்.

இவ்வருடத்தின் கடைசி மாதத்தை காணச்செய்த தேவனை நன்றியோடு துதிக்கின்றோம். வருகின்ற 2001 புத்தாண்டு நம் அனைவருக்கும் ஆசீர்வாதமான ஆண்டாக இருக்க ஜெபிக்கின்றோம். இவ்விதழ் உங்களுக்கு தொடர்ந்து அனுப்பப்படும். தவறாது படித்து வேத சத்தியங்களை கற்றுக்கொண்டு தேவனை அறிகிற அறிவில் வளர்ச்சியடையுங்கள். இவ்விதழை படிக்க ஆர்வமுள்ளவர்களுக்கு தயவு செய்து கொடுத்து உதவுங்கள்.

**அனைவருக்கும் 2001-ன் புத்தாண்டு வாழ்த்துக்கள்.**

*அன்புடன்,*

**ஆசிரியர்**

**இதழின் உள்ளே . . .** **பக்கம்**


| | | |
|---|---|---|
| 1. | அழைக்கப்பட்டவர்கள் | 1 |
| 2. | மோசம் போகாதிருங்கள் | 5 |
| 3. | சிம்சோனின் மகாபலம் | 8 |
| 4. | கிறிஸ்துவின் பொதுவான பிரமாணம் | 9 |
| 5. | பெண்கள் பகுதி | 12 |
| 6. | தெரிந்து கொள்ளுங்கள் | 14 |
| 7. | ஒரு வழி பாடம் | 15 |
| 8. | அந்த வார்த்தை | 19 |
| 9. | புதிய ஏற்பாடு புத்தகங்களுக்கு குறிப்புகள் | 20 |
| 10. | நடப்பு செய்திகள் | |


FOR FREE DISTRIBUTION

"Go ye into all the world, and preach the gospel to every creature" mark 16:15


Published by
WORLD LITERATURE PUBLICATIONS
Post Box No. 5, Batlagundu - 624 202.
SOUTH INDIA.

தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்
THE WORD OF CHRIST
புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்
மரம் 1 டிசம்பர் 2000 கனி 1

ஆசிரியருரை

# அழைக்கப்பட்டவர்கள்
# Be Called



இந்த உலகத்தில் பிறந்த ஒவ்வொருவருக்கும் ஏதோ ஒரு வகையில் அழைப்பு வந்து கொண்டே இருக்கிறது. உலகத்திலே அழைக்கப்படுகிற அழைப்பானது உலகத்தோடு முடிந்துவிடுகிறது. அது ஒரு குறிப்பிட்ட காலங்களில் மட்டுமே செயல்படுகிறது. இந்த அழைப்பு உலகப் பிரகாரமான மாமிச அழைப்புங்கூட ஆனால் ஆண்டவராகிய இயேசுவிடுக்கும் அழைப்பு நித்தியத்திற்குரிய அழைப்பாகும். இந்த அழைப்பை தெரிந்து கொள்ள தொடர்ந்து இச்செய்தியை வாசியுங்கள்.

இந்த அழைப்பு ஒரு குறிப்பிட்ட மதம் என்று சொல்லப்படுகிற மார்க்கத்தினருக்கோ அல்லது ஒரு ஜாதியினருக்கோ அல்ல. உலகத்தில் மனிதனாக பிறந்த ஒவ்வொருவருக்கும் இயேசுவிடுக்கும் அழைப்பு. "வருத்தப்பட்டு பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன். நான் சாந்தமும் மனத்தாழ்மையுமாய் இருக்கிறேன்; என் நுகத்தை உங்கள் மேல் ஏற்றுக்கொண்டு, என்னிடத்தில் கற்றுக் கொள்ளுங்கள்; அப்பொழுது, உங்கள் ஆத்துமாக்களுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும். என் நுகம் மெதுவாயும், என் சுமை இலகுவாயும் இருக்கிறது என்றார்" (மத். 11:28-30). நமக்காக ஜீவனையே பலியாக ஒப்புக்கொடுத்த ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள், நான் சாந்தமும் மனத்தாழ்மையுமாய் இருக்கிறேன் என்னிடத்தில் கற்றுக் கொள்ளுங்கள் அப்பொழுது, உங்கள் ஆத்துமாக்களுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும் என்கிறார். இந்த இளைப்பாறுதலை பெற்றுக் கொள்ள அங்கும், இங்கும் ஓடிக்கொண்டிருக்கிறீர்களா? நீங்கள் எங்கு சென்றாலும் மெய்யான இளைப்பாறுதலை காண முடியாது.

இன்று உங்களை அழைக்கக்கூடியவர்கள் உங்களை வைத்து ஏதாவது ஒரு வகையில் ஆதாயம் தேட முயற்சிப்பார்கள் அல்லது உங்களை வேலை வாங்கி அவர்கள் சொகுசான வாழ்க்கை வாழ்வார்கள். இவர்களில் சிலர் தேவனை அறிந்திருக்கிறார்கள் பலர் தேவனை அறியாதிருக்கிறார்கள். மோசேயின் காலத்தில் இஸ்ரவேலர்கள்

எகிப்திலே பார்வோனிடத்தில் அடிமைகளாக இருந்தபொழுது செங்கள் வேலையிலும், வயல் வேலையிலும் ஈடுபட்டு வந்தார்கள். அப்பொழுது தேவனாகிய கர்த்தர் அவர்களின் கூக்குரலை கேட்டு, எகிப்தின் ராஜாவாகிய பார்வோனிடத்திலிருந்து அவர்களை விடுவிக்கும் படியாக மோசேயை தேவன் தெரிந்து கொண்டு "நீ இஸ்ரவேல் புத்திரராகிய என் ஜனத்தை எகிப்திலிருந்து அழைத்துவரும்படி உன்னைப் பார்வோனிடத்துக்கு அனுப்புவேன்" (யாத்.3:10) என்று சொல்லி இஸ்ரவேலருக்கு அழைப்புவிடுத்தார். இந்த அழைப்பை ஏற்றுக் கொண்ட இஸ்ரவேலர்கள் 10 விதமான வாதைகளை எகிப்திலே தங்களுடைய தேவன் செய்யக் கண்டார்கள். எகிப்திலிருந்து அழைத்து வரப்பட்ட 6 லட்சத்துக்கும் மேலான இஸ்ரவேலர்கள் 40 வருடகாலமாக தேவனை ஆராதித்துக் கொண்டு அவருடைய அடையாளங்களையும், அற்புதங்களையும் கண்ணாரக் கண்டார்கள். தேவதூதர்கள் சாப்பிடுகிற மன்னாவைப் புசித்தார்கள், அவர்களுடைய பாதரட்சையும், வஸ்திரங்களும் பழையதாய் போகாதிருந்தது. மேகஸ்தம்பத்தினாலும், அக்கினிஸ்தம்பத்தினாலும் வழி நடத்தப்பட்டார்கள். இவ்வளவு நிறைவான ஆசீர்வாதத்தை அனுபவித்த இஸ்ரவேலர் அவருடைய அழைப்பை அசட்டை செய்ய ஆரம்பித்தனர். ஆதலால் தேவன் அவர்களுக்கு வாக்கு பண்ணின பாலும், தேனும் ஓடுகிற கானானை கண்டடையாமல் வழியிலே மரித்துப் போனார்கள். எகிப்திலே புறப்படும் போது எண்ணப்பட்டவர்களில் இருந்த யோசுவா, காலேபு ஆகிய இருவர் மட்டுமே கானானில் பிரவேசித்தார்கள். அவர்களோடு இருந்த மற்ற இஸ்ரவேலரின் சந்ததியாரும் கானானை சுதந்தரித்தார்கள் என பரிசுத்த வேதாகமத்தில் வாசிக்கின்றோம்.

இஸ்ரவேல் மக்களைப் போல இன்றும் தேவனுடைய அழைப்பை அசட்டை பண்ணும் அநேகர் உண்டு. இயேசு கூறும் உவமையை கவனியுங்கள். "ஒரு மனுஷன் பெரிய விருந்தை ஆயத்தம் பண்ணி, அநேகரை அழைப்பித்தான். விருந்து வேளையில் தன் ஊழியக்காரனை நோக்கி: நீ அழைக்கப்பட்டவர்களிடத்தில் போய், எல்லாம் ஆயுத்தமாயிருக்கிறது, வாருங்கள் என்று சொல்லென்று அவனை அனுப்பினான் அவர்களெல்லாரும், போக்குச் சொல்ல தொடங்கினார்கள். ஒருவன் ஒரு வயலைக் கொண்டேன் நான் அகத்தியமாய்ப் போய், அதைப் பார்க்க வேண்டும், என்னை மன்னிக்கும்படி வேண்டிக் கொள்ளுகிறேன் என்றான். வேறொருவன்: ஐந்தேர்மாடு கொண்டேன், அதைச் சோதித்துப் பார்க்கப் போகிறேன், என்னை மன்னிக்கும்படி வேண்டிக் கொள்ளுகிறேன் என்றான். வேறொருவன். பெண்ணை விவாகம் பண்ணினேன், அதினால் நான் வரக்கூடாது என்றான். அந்த ஊழியக்காரன் வந்து, இவைகளைத் தன் எஜமானுக்கு அறிவித்தான். அப்பொழுது வீட்டெஜமான் கோபமடைந்து, தன் ஊழியக்காரனை நோக்கி; நீ பட்டணத்தின் தெருக்களிலும், வீதிகளிலும் சீக்கிரமாய்ப் போய் ஏழைகளையும் ஊனரையும், சப்பாணிகளையும், குருடரையும் இங்கே கூட்டிக் கொண்டு வா என்றான். ஊழியக்காரன் அப்படியே செய்து: ஆண்டவரே, நீர் கட்டளையிட்டபடி செய்தாயிற்று, இன்னும் இடம் இருக்கிறது என்றான். அப்பொழுது எஜமான் ஊழியக்காரனை நோக்கி, நீ

பெருவழிகளிலும் வேலிகளருகிலும் போய், என் வீடு நிறையும்படியாக ஜனங்களை உள்ளே வரும்படி வருந்திக் கூட்டிக் கொண்டு வா; அழைக்கப்பட்டிருந்த அந்த மனுஷரில் ஒருவனாகிலும் என் விருந்தை ருசி பார்ப்பதில்லையென்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றான் என்று சொன்னார்" (லூக். 14:16-24).

மேலுள்ள உவமையின்படி இன்று அழைக்கப்பட்ட அநேகர் கிறிஸ்துவின் உபதேசத்தை புறம்பே தள்ளுகின்றனர். ஒவ்வொரு வாரமும் கர்த்தருடைய பந்தியை நினைவு கூறும்படியாக வேதம் போதிக்கின்றது. ஆனால் அநேக கிறிஸ்தவர்கள் இன்று எனக்கு ஒரு முக்கியமான வேலை இருக்கிறது ஆகையால் நான் சபைக்கு வர இயலாது. அடுத்தவாரம் கலந்து கொள்கிறேன் என்று சாக்குபோக்கு சொல்ல ஆரம்பித்து விடுகின்றனர். ஏன்! திருமணமே இக்காலங்களில் ஞாயிற்று கிழமைகளில் வைக்க ஆரம்பித்து விட்டனர். அன்றைய நாள் தான் விடுமுறைநாள் அப்பொழுது வைத்தால்த்தான் எல்லாரும் வருவார்கள் என்று சொல்லி தங்களுக்கு தாங்களே போதகர்களாக மாறிக் கொண்டு, அழைக்கப்பட்ட அழைப்பை அசட்டை செய்து கொண்டு மரணத்தை நோக்கி வெற்றி நடை போடுகின்றார்கள்.

பிரியமான சகோதரனே, சகோதரியே நீ தேவனுடைய அழைப்பை ஏற்க மறுத்து நான் ஒரு வயலைக் கொண்டேன் என்றும், நான் ஐந்தேர் மாடு கொண்டேன் என்றும், நான் பெண்ணை விவாகம் பண்ணினேன் என்றும் மேற்கண்ட உவமையின்படி உன் காரியங்களையே பெரிதாக நினைத்து அவைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து அவைகளைக்கொடுத்த உன் தேவனாகிய கர்த்தரை மறந்து அவருடைய குமாரனாகிய இயேசுவின் அழைப்பை ஏற்க மறுப்பாயானால் அழிவு சடுதியாய் வரும். " அழைக்கப்பட்டவர்கள் அநேகர் தெரிந்து கொள்ளப்பட்டவர்களோ சிலர்" (மத். 20:16) என்ற வசனப்படி நீ அழைக்கப்பட்டும் தெரிந்து கொள்ளப்படாமற் போய் விட்டால் உன் நிலைமை என்னவாகும் சற்று யோசித்துப் பார். "இம்மைக்காக மாத்திரம் நாம் கிறிஸ்துவின் மேல் நம்பிக்கையுள்ளவர்களாயிருந்தால், எல்லா மனுஷரைப் பார்க்கிலும் பரிதபிக்கப்படத்தக்கவர்களாயிருப்போம்" (1 கொ. 15:19).

நம்மை அழைத்த தேவன் இஸ்ரவேல் மக்களை ஆசீர்வதித்தது போல இன்றும் நம்மை ஆசீர்வதிப்பதற்கு வல்லமையுடையவராய் இருக்கிறார். ஆகையால் தான் "முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள், அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக் கூடக் கொடுக்கப்படும்" (மத். 6:33) என்கிறார். நாம் முதலிடத்தை தேவனுக்கு கொடுக்காமல், நம் வேலைகளுக்கு முதலிடம் கொடுப்பதினாலே சில வேளைகளில் நாம் ஆசீர்வதிக்கப் படாமலிருக்கின்றோம். அநேகர் என்ன நினைக்கின்றார்கள் என்றால் இயேசு ஆண்டவர் யூதருக்கு மட்டுமே தேவன் நமக்கல்ல என்கிறார்கள். அப்போஸ்தலனாகிய பவுல் ரோமருக்கு எழுதும்போது "அவர் யூதரிலிருந்து மாத்திரமல்ல, புறஜாதிகளிலுமிருந்து நம்மை அழைத்திருக்கிறாரே" (ரோ. 9:24) என்று குறிப்பிடுகின்றார். மேலும் ஆண்டவராகிய இயேசு கூறும்போது "என்னிடத்தில் வருகிறவனை நான் புறம்பே தள்ளுவதில்லை" (யோ.6:37) என்கிறார். இப்படி நம்மை புறம்பே


தள்ளாத ஜீவனுள்ள ஆண்டவர் நமக்கு இருக்கும் போது நாம் ஏன் கலங்க வேண்டும்? இன்றும் அவர் உங்களை ஆசீர்வதிப்பதற்கு சித்தமுள்ளவராயிருக்கிறார். நீங்கள் ஒருவேளை நினைக்கலாம் நான் இயேசுவை ஏற்றுக்கொண்டு 10 வருடங்களாகி விட்டதே, எனக்கு ஏன் இந்த பாடுகள், ஏன் இந்த பிரச்சனைகள், தேவன் ஏன் ஜெபத்தை கேட்கவில்லையே என்று நீங்கள் அங்கலாய்க்கலாம். பிரிய நண்பா! நீ முதலாவது உன் முழு இருதயத்தை அவருக்கு கொடுத்து அவருடைய வசனத்துக்கு கீழ்படிந்துள்ளாயா? என்பதை யோசித்துப் பார். "தேவ கிருபையைச் சத்தியத்தின்படி அறிந்து கொண்ட நாள் முதல், அது உங்களுக்குள்ளும் பலன் தருகிறதாயிருக்கிறது" (கொலோ 1:6). இவ்வசனத்தின் படி நாம் என்று சத்தியத்தின்படி இயேசுவை அறிந்து கொண்டோமோ அந்த நாள் முதல் அது நமக்கு பலன் தருகிறதாயிருக்கிறது. இஸ்ரவேலர்கள் எகிப்திலே இருக்கும் போது தேவனை தெரிந்து இருந்தார்கள். ஆனால் பார்வோனிடத்தில் அடிமைகளாக இருந்து குறைவை அனுபவித்தார்கள். பின்பு தேவவார்த்தைக்கு கீழ்படிந்து அழைப்பை ஏற்றுக் கொண்ட நாள் முதல் 40 வருடம் தேவ ஆசீர்வாதத்தை அளவில்லாமல் பெற்றார்கள். அதே போல் தான் இன்றும் ஆண்டவராகிய இயேசுவின் அழைப்பை ஏற்றுக்கொண்டு சத்தியத்தின்படி ஜீவிக்க ஆரம்பிக்கும் போது நீங்கள் தேவனால் ஆசீர்வாதிக்கப்படுவீர்கள்.

"தம்முடைய மகிமையினாலும் காருணியத்தினாலும் நம்மை அழைத்தவரை அறிகிய அறிவினாலே ஜீவனுக்கும் தேவ பக்திக்கும் வேண்டிய யாவற்றையும், அவருடைய திவ்விய வல்லமையானது நமக்குத் தந்தருளினதுமன்றி, இச்சையினால் உலகத்திலுண்டான கேட்டுக்குத் தப்பி, திவ்விய சுபாவத்துக்கும் பங்குள்ளவர்களாகும் பொருட்டு, மகாமேன்மையும் அருமையுமான வாக்குத்தத்தங்களும் அவைகளினாலே நமக்குஅளிக்கப்பட்டிருக்கிறது" (2பேது.1:3,4) தேவன் நம்மை அழைத்து, அவரை அறிகிற அறிவினாலே வளர்ச்சியடையவும், பிசாசின் பாவ இச்சைக்கு தப்பி, அவர் நமக்காக நியமித்துள்ள நித்தியத்திலே பங்குபெறவும் அருமையான வாக்குத்தத்தங்களையும் கொடுத்துள்ளார். இப்படி அற்புதமான பரிசுத்த வேதாகம பொக்கிஷம் நமக்கு அருட்கொடையாக கொடுக்கப்பட்டுள்ளது. அதை நீங்கள் தினமும் வாசித்து அவரை அறிகிற அறிவில் வளர்ச்சியடையுங்கள். இப்பூமியில் இயேசு நமக்கு விட்டு சென்ற அவருடைய அடிச்சுவடுகளாகிய மாதிரியை பின் தொடருங்கள். தேவனுடைய அழைப்பை ஏற்றுக் கொண்டு "பொல்லாங்காய்த் தோன்றுகிற எல்லாவற்றையும் விட்டு விலகுங்கள். சமாதானத்தின் தேவன் தாமே உங்களை முற்றிலும் பரிசுத்தமாக்குவாராக. உங்கள் ஆவி ஆத்துமா சரீரம் முழுவதும் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து வரும்போது குற்றமற்றதாயிருக்கும்படி காக்கப்படுவதாக. உங்களை அழைக்கிறவர் உண்மையுள்ளவர்" (1 தெச. 5:22-24). ஆகையால் உங்களை அழைக்கிற தேவன் உண்மையுள்ளவராயிருக்கிறது போல நீங்களும் உங்கள் நடக்கையிலும், ஆவி ஆத்துமா சரீரத்திலும் குற்றமற்றவர்களாயிருக்க பிரயாசப்படுங்கள். கர்த்தர் தாமே அவருடைய அழைப்பை உங்களில் உறுதிப்படுத்துவாராக!

# மோசம் போகாதிருங்கள்

# Be Not Deceived

**J.C. Choate**





**நா**ம் ஏமாறக் கூடாது என கர்த்தரின் வசனம் நம்மை மீண்டும், மீண்டும் எச்சரிக்கிறது. ஏமாற்றப்படுவது என்றால், ஒருவன் தவறாக வழி நடத்தப்படுதல், பொய்யை ஏற்றுக் கொள்ளுவது, தவறான கொள்கை போதிக்கப்பட்டு அதை மனிதன் ஏற்றுக் கொள்ளுகிறான் என்று பொருள். படித்துக் கற்றுக் கொள்ள நம்மிடம் சுவிசேஷம் இருப்பதால் ஒரு மனிதன் எளிதில் ஏமாற முடியாது என நீங்கள் நினைக்கலாம்; ஆனால் அவனும் ஏமாற்றப்பட்டு விடக்கூடும்.

இயேசு கூறினார் : "... ஒருவனும் உங்களை வஞ்சியாதபடி எச்சரிக்கையாயிருங்கள்; ஏனெனில், அநேகர் வந்து என் நாமத்தைத் தரித்துக் கொண்டு : நானே கிறிஸ்து என்று சொல்லி, அநேகரை வஞ்சிப்பார்கள்". (மத்தேயு 24:4,5). தங்களை கிறிஸ்து அல்லது மேசியா என்று சொல்லி ஏமாற்றும் போலிகளிடம் ஏமாறும் மக்களைப் பற்றி சிறிது சிந்தித்துப் பாருங்கள்! இப்படிப்பட்ட பொய்யர்களின் வலைகளில் விழக்கூடிய புத்திசாலி மக்களும் இருக்கின்றனர் என்பதை யார் எண்ணிப் பார்க்கக் கூடும்? ஆனால் அநேகர் ஏமாந்து போகின்றனர்.

பவுல் எச்சரித்தார் : "அநியாயக்காரர் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லையென்று அறியீர்களா? வஞ்சிக்கப் படாதிருங்கள்; வேசி மார்க்கத்தாரும், விக்கிரகாராதனைக்காரரும், விபச்சாரக்காரரும், சுயபுணர்ச்சிக்காரரும், ஆண்புணர்ச்சிக்காரரும், திருடரும், பொருளாசைக்காரரும், வெறியரும், உதாசினரும், கொள்ளைக்காரரும், தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லை". (1 கொரிந்தியர் 6:9,10) மீண்டும் அவர் சொன்னார், "மோசம் போகாதிருங்கள்; ஆகாத சம்பாஷனைகள் நல்லொழுக்கங்களைக் கெடுக்கும்". (1 கொரி. 15:33)

கலாத்தியருக்கு பவுல் எழுதும் போது, "மோசம் போகாதிருங்கள், தேவன் தம்மைப் பரியாசம் பண்ண வொட்டார்; மனிதன் எதை விதைக்கிறானோ அதையே அறுப்பான். தன் மாம்சத்திற்கென்று விதைக்கிறவன் மாம்சத்தினால் அழிவை அறுப்பான்; ஆவிக்கென்று விதைக்கிறவன் ஆவியினாலே நித்திய ஜீவனை அறுப்பான்" என்றார் (கலாத்தியர் 6:7,8).

"நாம் இனிக் குழந்தைகளாயிராமல், மனிதனுடைய சூதும் வஞ்சிக்கிறதற்கேதுவான தந்திரமுள்ள போதகமாகிய பலவித காற்றினாலே அலைகளைப் போல அடிபட்டு அலைகிறவர்

களாயிராமல், "(எபே. 4:14), இப்படிப்பட்டவைகளினிமித்தமாகக் கீழ்ப்படியாமையின் பிள்ளைகள் மேல் தேவ கோபாக்கினை வருவதால், ஒருவனும் உங்களை வீண் வார்த்தைகளினாலே மோசம் போக்காத படிக்கு எச்சரிக்கையாயிருங்கள்" (எபே.5:6) என எபேசியர்கள் எச்சரிக்கப்படுகின்றனர்.

பவுல் தெசலோனிக்கேயருக்கு நினைவூட்டுகிறார் : "எவ்விதத்தினாலும் ஒருவனும் உங்களை மோசம் போக்காதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்; ஏனெனில் விசுவாச துரோகம் முந்தி நேரிட்டு, கேட்டின் மகனாகிய பாவ மனிதன் வெளிப்பட்டாலொழிய, அந்த நாள் வராது" (2 தெசலோ. 2:3) "பொல்லாதவர்களும் எத்தர்களுமானவர்கள் மோசம் போக்குகிறவர்களாகவும், மோசம் போகிறவர்களாகவுமிருந்து மேன் மேலும் கேடுள்ளவர்களாவார்கள்" (2 தீமோ 3:13) என்று தீமோத்தேயுவுக்கு எழுதினார் :

"அல்லாமலும், நீங்கள் உங்களை வஞ்சியாதபடிக்குத் திருவசனத்தைக் கேட்கிறவர்களாய் மாத்திரமல்ல, அதின்படி செய்கிறவர்களாயுமிருங்கள்" என்று யாக்கோபு எழுதினார் (யாக். 1:22). பின்னர் பரிசுத்த ஆவியால் ஏவப்பட்டு யோவான் எழுதினார். "நமக்குப் பாவமில்லையென்போமானால், நம்மை நாமே வஞ்சிக்கிறவர்களாயிருப்போம், சத்தியம் நமக்குள் இராது" (1 யோவான் 1:8).

மேலே கூறிய வசனப்பகுதிகளிலிருந்தும் இன்னும் கொடுக்கப் படக்கூடிய பல வசனங்களிலிருந்தும், ஏமாற்றத்தின் விளைவாக மோசம் போகவும், தவறான வழி நடத்துதலால் ஒரு மனிதன் இறுதியில் நித்தியத்திற்குமாக வீழ்ந்து போகவும் கூடும் என நாம் அறிகிறோம்.

தன்னைத்தானே ஒருவன் ஏமாற்றிக் கொள்ள கூடும். எதையாவது செய்யவோ அல்லது நம்பவோ அவன் விரும்பலாம். அக்காரியம் சரியாகவோ அல்லது தவறாகவோ இருப்பினும் அதுவே சரியானது என்று தன்னைத் தானே சமாதானப்படுத்திக் கொள்ளுகிறான் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே ஒபதியா தீர்க்கதரிசி எழுதினார். "..உன் இருதயத்தின் அகந்தை உன்னை மோசம் போக்குகிறது". (வ.3)

ரோமர் 16:17,18 வசனங்களில் பவுல் எச்சரிப்பது போல பிறரால் வஞ்சிக்கப்பட ஒருவன் தன்னை அனுமதிக்கக்கூடும் , "... நீங்கள் கற்றுக் கொண்ட உபதேசத்திற்கு விரோதமாய்ப் பிரிவினைகளையும் இடறல்களையும் உண்டாக்குகிறவர்களைக் குறித்து எச்சரிக் கையாயிருந்து, அவர்களை விட்டு விலக வேண்டுமென்று உங்களுக்குப் புத்தி சொல்லுகிறேன். அப்படிப்பட்டவர்கள் நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கு ஊழியஞ் செய்யாமல் தங்கள் வயிற்றுக்கே ஊழியம் செய்து, நயவசனிப்பினாலும் இச்சகப் பேச்சினாலும், கபடில்லாதவர்களுடைய இருதயங்களை வஞ்சிக்கிறவர் களாயிருக்கிறார்கள்" கேட்கக் கூடியவன் ஒரு வேளை ஒரு போதகரின் பேரில் அபார நம்பிக்கை உள்ளவனாக இருந்தால், அவர் வேதாகமத்திற்கு முரண்பாடானவற்றைக் கற்றுக் கொடுத்தாலும், சத்தியத்தை தான் கற்றுக் கொடுக்கிறார் என்று தன்னைத் தானே சமாதானப்படுத்திக் கொள்ளுகிறான்.

பிரபலமான ஒரு தவறான கொள்கையால் ஒருவன் ஏமாற்றப் படலாம். பல ஆண்டுகளாக பரவலாகப் போதிக்கப்பட்டு, நம்பப்பட்டு வரும் தவறானது, தேவனுடைய வார்த்தையை விடவும் அதிக உண்மை போலத் தோற்றமளிக்கிறது. ஆனால் அவருடைய வார்த்தைக்கு அது முற்றிலும் முரணாக இருக்கிறது. "நயவசனிப்பினாலும் இச்சகப் பேச்சினாலும், கபடில்லாதவர்களுடைய இருதயங்களை வஞ்சிக்கிறவர்களைப் பற்றி ரோமர் 16:18ம் வசனத்தில் பவுல் கூறிய வார்த்தைகள் சகலரையும் கவனமாக இருக்கச் செய்கிறது.

பெரும்பாலான மக்களைப் பின்பற்றி ஒருவர் மோசம் போகக்கூடும் அதிகமானபேர் தவறாக இருப்பது சாத்தியமல்ல என அவன் காரணம் கற்பிக்கலாம், ஆனால் மத்தேயு 7:13, 14 வசனங்களில் இயேசு கூறியதை அவன் மறந்து விடுகிறான்: "... கேட்டுக்குப் போகிற வாசல் விரிவும், வழி விசாலமுமாய் இருக்கிறது, அதின் வழியாய்ப் பிரவேசிக்கிறவர்கள் அநேகர்".

நமது இரட்சிப்பு, சபை, ஏற்றுக் கொள்ளப்படத்தக்க ஆராதனை, நாம் வாழ வேண்டிய வழிமுறை, கிறிஸ்துவின் வருகையின் நிச்சயம், அதைத் தொடர்ந்து நடைபெறவிருக்கும் நியாயத் தீர்ப்பு, இறுதியாக நித்திய ஜீவன் ஆகியவைகளுக்கு தேவன் உண்டாக்கிய திட்டத்திற்கு நாம் வரும் போது மோசம் போக பல வழிகள் உள்ளன. சுவிசேஷங்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கும் சரியான சத்தியங்களை தவறுகள் என்று ஒதுக்கி விட்டு, மனிதன் உண்டாக்கிய உபதேசங்கள் பொதுவாக சத்தியங்களாக ஏற்றுக் கொள்ளப்படுகின்றன. ஏனெனில், தேவனுடைய சத்தியங்களைக் கேட்பதை விட மனிதனுடைய பொய்களை மக்கள் மிக அதிகமாகக் கேட்டு வந்திருக்கின்றனர்! ஆத்துமாவைப் பொறுத்தவரை, தேவனுடைய வார்த்தையை மட்டுமே பின்பற்றுங்கள் என்று உங்கள் அனைவரையும் வேண்டுகிறோம்.

**தமிழில் எஸ்.எஸ். ராஜன்**



## வேத அறிவுப்போட்டி எண் 4ல் வெற்றிபெற்றவர்கள்

1. P. அலிஸ்மேரியம்மாள் - வத்தலக்குண்டு
2. A. மேரியம்மாள் - வத்தலக்குண்டு
3. S. வைலட்மெர்ஸி - வத்தலக்குண்டு
4. S. கிறிஸ்டியான் - சென்னை
5. Mr. டேவிட்குமார் - சென்னை
6. K. தேவசகாயம் - தேர்வழி
7. M. நோயல்ராஜ் - சேலம்
8. N. ஜேக்கப் - கும்மிடிபூண்டி
9. D. ரூத்மேரி - தேவம்பேடு
10. A. ரவிமோகன்ராஜ் - முத்துராமலிங்கபுரம்

## வேத அறிவுப் போட்டி எண் 4ன் விடைகள்

| | | | |
|---|---|---|---|
| 1. | எகிப்திலிருந்து | – | ஓசியா 12:13 |
| 2. | பவுல், தீமோத்தேயுவுக்கு | – | 2 தீமோ. 4:17 |
| 3. | சுழல் காற்றிலும், பெருங்காற்றிலும் | – | நாகூம். 1:3 |
| 4. | சீயோனிலிருந்து, எருசலேமிலிருந்து | – | ஏசா. 2:3 |
| 5. | எருசலேம் | – | லூக் 24:47 |
| 6. | திக்கற்றவர்களுடைய | – | சங். 102:16 |
| 7. | நெகேமியா | – | நெகே. 13:19 |
| 8. | பவுல் | – | அப். 23:3 |
| 9. | இயேசுகிறிஸ்து | – | எபி. 8:2 |
| 10 | ரூபை | – | ரோ. 16:13 |

சிறுவர்பகுதி

# [illegible]

**வேதபகுதி : மத்தேயு 17 : 24–27**



சிம்சோன் என்ற ஒரு தேவமனிதன் தெலிலாள் என்று சொல்லப்படும் ஒரு ஸ்திரீயோடே சிநேகமாயிருந்தான். சிம்சோனோ மகா பலசாலி கர்த்தர் அவனுக்கு உடல் ஆரோக்கியத்தையும் நல்ல பலத்தையும் கொடுத்திருந்தார். அவனுக்கு விரோதமாய் எழும்பின பெலிஸ்தரின் அதிபதிகள் இவனுடைய பலத்தை அறிய தெலீலாளை சந்தித்து, உனக்கு நாங்கள் ஒவ்வொருவரும் ஆயிரத்து நூறு வெள்ளிக்காசு கொடுப்போம், நீ அவனை நயம் பண்ணி அவனுடைய மகா பலம் எதினாலே உண்டாகிறது என்பதை எங்களுக்கு தெரிவி அப்பொழுது அவனை கட்டிச் சிறுமைப்படுத்துவோம் என்றார்கள். அதற்கு அவள் உடன்பட்டு சிம்சோனைப்பார்த்து உன் மகாபலம் எதினாலே உண்டாகிறது என்றாள். அவனோ, உலராத பச்சையான ஏழு அகனிநார்க் கயிறுகளாலே என்னைக் கட்டினால் நான் பலட்சயமாகி மற்ற மனுஷனைப் போல் ஆவேன் என்றான். இதை அவள் பெலிஸ்தர்களுக்கு அறிவித்தாள். அவர்கள் அவைகளை ஆயத்தம் பண்ணி அவளிடத்தில் கொடுத்தார்கள். அவள் அவனை கட்டுவித்து சிம்சோனே, பெலிஸ்தர் உன் மேல் வந்து விட்டார்கள் என்றாள். சிம்சோனோ அவைகளை நெருப்புப்பட்டவுடனே அற்றுப்போகிறதைப் போல அறுத்துப் போட்டான்.

தெலீலாளோ, இதோ என்னைப் பரியாசம் பண்ணி பொய் சொன்னாய் இப்பொழுதும் உன்னை எதினாலே கட்டலாம் எனக்குச் சொல் என்றாள் அவனோ, இதுவரைக்கும் பயன்படுத்தாத புதுக்கயிறுகளால் என்னை இறுகக் கட்டினால் நான் பலம் இழந்து விடுவேன் என்றான். அவள் அந்தப்படியே கட்டி சிம்சோனே, பெலிஸ்தர் உன் மேல் வந்து விட்டார்கள் என்றாள். பதிவிருந்தவர்கள் வீட்டிற்குள் இருந்தார்கள். சிம்சோனோ, அதை ஒரு நூலைப் போல அறுத்துப் போட்டான்.

தெலீலாளோ, இதுவரைக்கும் என்னைப் பரியாசம் பண்ணி பொய் சொன்னாய் உன்னை எதினாலே கட்டலாம் என்றாள். அவனோ, நீ என் தலை மயிரில் ஏழு ஜடைகளை நெசவுநூல் பாவோடே பின்னி விட்டால் ஆகும் என்றான். அவள் அப்படியே செய்து ஆணியடித்து மாட்டி சிம்சோனே, பெலிஸ்தர் உன்மேல் வந்து விட்டார்கள் என்றாள். அவன் நித்திரையை விட்டெழுந்து நெசவு ஆணியையும் பிடுங்கிக் கொண்டு போனான்.

தெலீலாளோ, உன் இருதயம் என்னோடு சிநேகமாய் இருக்கவில்லை ஆகையால் தான் இந்த மூன்று முறையும் நீ என்னை பரியாசப் பண்ணி உன்பலம் எதினால் உண்டாகிறது என்று எனக்கு சொல்லாமற் போனாய் என்று தினம் தினம் அவனை அலட்டிக் கொண்டிருந்தாள். அவனுடைய ஆத்துமா அதை கேட்டு சாகத்தக்கதாக கவலைப்பட்டு தன் இருதயத்தில் இருந்ததை வெளிப்படுத்தி சவரன்கத்தி என் தலையின்மேல் படவில்லை நான் என் தாயின் கர்ப்பத்தில் பிறந்தது முதல் தேவனுக்கென்று நசரேயனானவன், என் தலை சிரைக்கப்பட்டால் என் பலம் என்னை விட்டுப்போம் என்றான். அவள் அவனை தன் மடியிலே நித்திரை செய்யப் பண்ணி ஒருவனை அழைத்து அவன் தலையை மொட்டை அடித்துப் போட்டாள், அதினால் சிம்சோனின் பலம் அவனை விட்டு நீங்கிற்று. சிம்சோனே, பெலிஸ்தர் உன்

மேல் வந்து விட்டார்கள் என்றாள். அவன் நித்திரையை விட்டு எழுந்து முன்போல் போனான் அவனை அவர்கள் பிடித்து அவன் கண்களை பிடுங்கிப்போட்டு, விலங்கு போட்டு மாவரைக்க வைத்தார்கள்.

இதனால் சந்தோஷமடைந்த பெலிஸ்தரின் பிரபுக்கள் தங்கள் தேவனை புகழ்ந்து, சிம்சோனை வேடிக்கை பொருளாக மாற்றி களிகூர்ந்தார்கள். பின்பு சிம்சோனுக்கோ முடிமுளைக்க ஆரம்பித்தது. அப்பொழுது சிம்சோன் கர்த்தரை நோக்கி கூப்பிட்டு தேவனே என்னைப் பலப்படுத்தும் என்று சொல்லி இரண்டு தூண்களையும் பிடித்து இழுத்து என் ஜீவன் பெலிஸ்தரோடே மடியக்கடவது என்றான் அப்படியே பெலிஸ்த ஜனங்களோடு கூட மடிந்து போனான்.

பார்த்தீர்களா ? தேவனுடைய வார்த்தைக்கு கீழ்ப்படியாமல் தான் விரும்புகிற பெண்ணோடே சிநேகம் வைத்த சிம்சோன் தான் நேசித்த பெண்ணாலே மடிந்து போனான் தேவனோ அவனுக்கு நல்ல பலத்தை கொடுத்திருந்தார். அவனோ, தன் பலவீனத்தினால் பெண்ணின் சிநேகத்திற்கு அடிமையாகிவிட்டான். இதைத்தான் எச்சரிக்கையாக நீதி மொழிகள் புத்தகத்தில் படிக்கிறோம். “உன் இருதயம் அவள் வழியிலே சாய வேண்டாம்; அவள் பாதையிலே மயங்கித் திரியாதே” (நீதி. 7:25) என்று.

***மனப்பாட வசனம் :***

“பலவானைப் பார்க்கிலும் நீடிய சாந்தமுள்ளவன் உத்தமன்” *(நீதிமொழிகள் 16:32)*

# கிறிஸ்துவின் பொதுவான பிரமாணம்



**ப**ரலோகத்திலே தேவன் இருக்கிறார் என்று வேதகாமம் தெளிவாகக் கூறுகிறது. மனுக்குலம் ரட்சிக்கப்பட தேவன் தம் குமாரனை இவ்வுலகிற்கு அனுப்பினார். அவர் மூலம் இலவச ரட்சிப்பை ஈந்தார். மனுகுலம் சீர்பட தம் வார்த்தைகளடங்கிய வேதாகமத்தை கொடுத்திருக்கிறார். அதை உலகில் உள்ள எல்லோரும் படித்து அதற்கு கீழ்படிந்து பயன் பெறலாம். தேவனையும் அவருடைய வல்லமையான வசனத்தையும் விட்டு விட்டு, ஒருவன் தேவனுக்கு பிரியமானவனாக ஜீவிக்க முடியாது. ஏனெனில் அவர் சித்தத்தை அறிந்து கீழ்படிந்தால் தேவன் அவன்மீது பிரியமாயிருப்பார்.

கிறிஸ்து உலக ரட்சகர். இம்மண்ணில் வந்த ஒவ்வொரு வருக்காகவும் மரணத்தை ருசிபார்த்தார். அவரே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறார். அவரையல்லாமல் ஒருவனும் பிதாவிடத்தில் சேரான். கிறிஸ்துவுக்கு வெளியே எந்த சத்தியமுமில்லை. அவரே சத்தியத்தின் முழுமையாக இருக்கிறார்.

“எல்லோரும் பாவம் செய்து தேவ மகிமையற்றவர்களாகி” என்று வேதம் கூறுகிறது அப்படியானால் பாவம் ஒரு பொதுப்படையானது. தீய நோக்கம் பாவமாம் என்றார் சாலமோன் நன்மை செய்ய அறிந்திருந்தும் அதை செய்ய திராணியிருந்தும்,

செய்யாமற்போனால் அதுவும் பாவம். விசுவாசத்தினால் வராத யாவும் பாவம். விசுவாசம் கேள்வியினால் வரும், தேவனுடைய வசனத்தை கேட்பதினால் வரும்.

பாவம் என்பது தேவனுடைய கட்டளையை மீறுவது ஆகும். அநீதி எல்லாம் பாவம் ஆகும். இவைகள் எல்லாம் நமக்கு சட்டப்படி குற்றங்களாக காணப்படாவிட்டாலும், தேவனுடைய பார்வையில் இவைகள் பாவங்களே. சரி இப்பொழுது யார்தான் பாவி? ரோமர் முதல் 3 அதிகாரங்கள் கூறுவது: 1ம் அதிகாரத்தில் புறஜாதிகள் பாவம் செய்திருக்கின்றனர். 2-ம் அதிகாரத்தில் யூதர்களும் பாவிகள். 3-ம் அதிகாரத்தில் 9-ம் வசனம், ஆனாலும் என்ன அவர்களைப் பார்க்கிலும் நாங்கள் விசேஷித்தவர்களாக இல்லை. யூதர் கிரேக்கர் யாவரும் பாவத்திற்குட்பட்டவர்களென்பதை முன்பு திருஷ்டாந்தப் படுத்தினோமே மேலும் 23-ம் வசனத்தில், “எல்லோரும் பாவம்செய்து தேவ மகிமையற்றவர்களாகி” என்று பார்க்கிறோம்.

இந்த அஸ்திவாரத்தின் மீதுதான் பவுல் ரோமருக்கு எழுதிய நிருபத்தில் கிறிஸ்துவின் சுவிசேஷத்தினால்தான் ஒருவன் நீதிமானாக்கபடுகிறான் என்று விவாதிக்கிறார். அப்படியானால் எல்லா மனுஷரும் கிறிஸ்துவின் பிரமாணத்திற்கு கீழ்படிய வேண்டிய அவசியத்தில் இருக்கிறார்கள். இயேசுவுக்கு முன்னோடியாய் வந்த யோவானும் கூட, “இதோ உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி” என்று இயேசுவைக் குறிப்பிட்டு சொன்னான். எபிரேயருக்கு எழுதிய ஆசிரியரும் கிறிஸ்து ஒவ்வொருவருக்காவும் மரணத்தை ருசி பார்த்தார் என்றார். அவ்வாறு அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியானவர் உயிர்த்தெழுந்து மீட்பரானார். இயேசு பிரதானகட்டளையை கொடுக்கும்பொழுது “நீங்கள் புறப்பட்டு போய் சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பின்பு பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே ஞானஸ்நானம் கொடுத்து, நான் உங்களுக்கு கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக் கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள் என்றார்.

இதையே மாற்கு குறிப்பிடும்போது, “நீங்கள் உலகமெங்கும் போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்” என்று இயேசு கூறினதாக குறிப்பிடுகிறார் இதையே லூக்கா தன் சுவிசேஷ புத்தகத்திலே குறிப்பிடும் பொழுது “அன்றியும் மனந் திரும்புதலும், பாவமன்னிப்பும் எருசலேம் தொடங்கி சகல தேசத்தாருக்கும் பிரசங்கிக்கப்படவும் வேண்டியது” என்று இயேசு கூறினார் என்றார். பரமேறிச்செல்லுவதற்குச் சற்றுமுன்னதாக, இயேசு, சீஷர்களைப் பார்த்து, நீங்கள் எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசி பரியந்தமும் எனக்கு சாட்சிகளாயிருப்பீர்கள் என்றார் (அப்.1:8). எல்லா மனுஷரும் கிறிஸ்துவின் பிரமாணத்தின் கீழ் வந்தால்தான், இயேசுவின் பிரதான கட்டளையை நிறைவேற்ற முடியும்.

எல்லோரும் அவருடைய கட்டளைக்கு கீழ்படிந்து அவருடைய பிள்ளைகளாக மாறவேண்டிய அவசியத்தில் இருக்கிறார்கள். யாருக்கும் விதிவிலக்கு கிடையாது. மானிடனாகப் பிறந்த ஒவ்வொருவனும், ஆண்டி முதல் அரசன் வரை, படித்தவன் முதல் பாமரன் வரை, ஏழை

முதல் பணக்காரன் வரை எல்லோரும் கிறிஸ்துவுக்கும் அவருடைய சுவிசேஷத்திற்கும் கீழ்படிய வேண்டிய அவசியத்தில் இருக்கின்றார்கள்.

"வருத்தப்பட்டு பாரஞ்சுமக்கிறவர்களே நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள். நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன். நான் சாந்தமும் மனத்தாழ்மையுமாயிருக்கிறேன். என் நுகத்தை உங்கள் மேல் ஏற்றுக் கொண்டு என்னிடத்தில் கற்றுக் கொள்ளுங்கள் அப்பொழுது உங்கள் ஆத்துமாக்களுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும். என் நுகம் மெதுவாயும், என் சுமை இலகுவாயும் இருக்கிறது என்றார்" இயேசு (மத். 11:28-20). எல்லோரும் கிறிஸ்துவின் பிரமாணத்தின் கீழ் வரவேண்டிய அவசியம் இல்லை என்றால் இயேசுவின் கனிவான அழைப்பினால் என்ன பிரயோஜனம்?

சுவிசேஷம் என்றால் நற்செய்தி என்று பொருள். யாருக்கு நற்செய்தி? பாவத்திலிருக்கும் எல்லா மனுஷருக்கும், எல்லோரும் கிறிஸ்துவின் பிரமாணத்திற்கு கீழ்படிய வேண்டிய அவசியம் இல்லை என்றால், இந்த நற்செய்தியால் யாருக்கு என்ன லாபம்?

பவுல் கொரிந்து பட்டணத்துக்குள் பிரவேசித்த போது, அந்த பட்டணத்து பிரஜைகள், வேசித்தனம் செய்கிறவர்களாகவும், சுயபுணர்ச்சிக்காரராகவும், விக்கிரகாராதனைக்காரராயும், பொருளாசைக்காரராகவும் இருந்தனர். இந்த பாவங்கள் எல்லாம் கொரிந்து பட்டணத்து சட்ட புத்தகத்தில் தண்டிக்கப்பட வேண்டிய குற்றங்களாக இல்லை. அவர்கள் சட்டம் இந்த பாவங்களைச் செய்ய அனுமதித்தது. மோசேயின் நியாயப்பிரமாணம் அப்பொழுது அமுலில் இல்லை. ஆகவே அதை மீறினவர்களாகவும், அவர்கள் கிறிஸ்துவின் பிரமாணத்தை மீறியவர்களாக எண்ணி பவுல் கூறுகிறார். எல்லா மனுஷரும் கிறிஸ்துவின் பிரமாணத்திற்கு கீழ்படிய வேண்டிய அவசியம் இல்லை என்றால், பவுல் எப்படி கொரிந்து பட்டணத்திலுள்ளவர்களை குற்றப்படுத்தியிருக்க முடியும்?

மேலும், நியாயத்தீர்ப்பின் போது எல்லா மனுஷரும் கணக்கு ஒப்புவிக்க வேண்டியவர்களாக இருக்கிறார்கள் (யோவா. 5:28-29), மரித்தவர்களும், உயிரோடு இருப்பவர்களும், அப்பொழுது அங்கிருப்பார்கள், சிறியோரும் பெரியோரும் அங்கிருப்பார்கள் (வெளி. 20:12)

நாமெல்லாம் கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக வெளிப்பட வேண்டும் (2 கொரி. 5:10). அவனவன் தன் தன் கணக்கை கொடுக்க வேண்டும் (ரோம.14:12). எல்லோரும் கிறிஸ்துவின் பிரமாணங்களுக்கு கீழ்படிய வேண்டிய அவசியம் இல்லை என்றால் எவ்வாறு பொதுவான நியாயத் தீர்ப்பு சாத்தியமாகும்.

சிலுவைக்கு முன் வாழ்ந்தவர்கள், மூதாதையர் யுகத்தில் அமுலில் இருந்த வழிமுறையின்படியோ, அல்லது மோசேயின் யுகத்தில் இருந்த நியாயப்பிரமாணத்தின் மூலமாகவோ நியாயத் தீர்க்கப் படுவார்கள். இவைகளிலிருந்து என்ன முடிவுக்கு வருவோம். கிறிஸ்துவின் பிரமாணத்திற்கு கீழ்படிய வேண்டிய அவசியத்தில் எல்லா மனுஷரும் இருப்பது உண்மையானால், எல்லாருக்கும் சுவிசேஷத்தை அறிவிக்க வேண்டியதும் கடமை.

அன்புள்ள நண்பனே, நீயும் கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்கு கீழ்படிய வேண்டிய அவசியத்தில் இருப்பது உண்மையானால், நீ முதலில் கீழ்படி. பின்பு மற்றவர்களுக்கு போதிப்பாய். யோவான் 14:6-ல் இயேசு, "நானே வழியும், சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன் என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான் என்றார். அப்படியானால், இயேசு ஒருவரே அந்த உண்மையான வழி. உன்னதத்திற்கு அழைத்துச் செல்லும் ஜீவ வழி. வேறு வழிகள் இல்லை. ஒரே வழி தான், அந்த வழி கிறிஸ்துவே. அவருக்கு வெளியே சத்தியமும் இல்லை, அவரே சத்தியத்தின் வெளிப்படாக இருக்கிறார். கிறிஸ்துவுக்கு கீழ்படிந்து அவருடைய பிள்ளையாக மாறி, அவருக்குள் ஜீவித்தால்தான் அந்த நற்பயனைப் பெற முடியும்.

கிறிஸ்தவ மார்க்கம் ஒரு பொதுவான மார்க்கம். எந்த சமயத்திற்கும், நாட்டுக்கும் சொந்தமானது அல்ல. கிறிஸ்து உலக ரட்சகர், தேவன் எல்லோரையும் நேசிக்கிறார், ஒருவனும் கெட்டுப்போகாமல் எல்லோரும் ரட்சிப்படைய வேண்டுமென்பதே தேவனுடைய திருசித்தம்.

**ஒரு வழி பாடம் 8ன் விடை : 1.C, 2.A, 3.B, 4.B, 5.B**

# ஜெபம் பண்ணுகிறபோது ஸ்திரீயானவள் தன் தலையை மூடிக்கொள்வது அவசியமா?

பெண்கள் பகுதி

## *Is a woman required to cover her Head while praying?*

**Betty Burton Choate**



"புருஷன் ஸ்திரீயிலிருந்து தோன்றினவல்ல, ஸ்திரீயே புருஷனிலிருந்து தோன்றினவள். புருஷன் ஸ்திரீக்காகச் சிருஷ்டிக்கப்பட்டவனல்ல, ஸ்திரீயே புருஷனுக்காகச் சிருஷ்டிக்கப்பட்டவள். ஆகையால் தூதர்களினிமித்தம் ஸ்திரீயானவள் (அடையாளமாக) தலையின் மேல் முக்காடிட்டுக் கொள்ள வேண்டும்".

"ஆகிலும் கர்த்தருக்குள் ஸ்திரீயில்லாமல் புருஷனுமில்லை, புருஷனில்லாமல் ஸ்திரீயுமில்லை. ஸ்திரீயானவள் புருஷனிலிருந்து தோன்றுகிறதுபோல, புருஷனும் ஸ்திரீயினால் தோன்றுகிறான்; சகலமும் தேவனால் உண்டாயிருக்கிறது.

- "..... ஆகையால் தூதர்களிமிமித்தம்..." என்பதன் பொருள் என்ன? இது விழுந்து போன தூதனாயிருந்தது - சாத்தான் - ஏவாளிடத்தில் வந்து அவளை தேவனுக்குக் கீழ்படியாதபடி நடத்திச் சென்றவன். ஏனென்றால் சாத்தானும், அவனுடைய தீங்கிழைக்கும் தூதர்களும்

இன்னும் உலகத்திலிருந்து கொண்டு, மனிதவர்க்கத்தை இன்னும் சோதித்துக் கொண்டிருக்கிறபடியினால், ஆவிக்குரிய உலகில் இருப்பது போல மாம்ச உலகத்திலும் 'ஒரு ஸ்திரீயின் தலை மூடப்பட்டிருப்பது ஒரு அடையாளமாக இருக்கிறது எனக் கூறப்படுகிறது, ஏனென்றால் அவள் தனது புருஷனின் அதிகாரத்தின் கீழ் வாழ்ந்து கொண்டிருக்கிறாள்'.

- புருஷனுக்கும் ஸ்திரீக்குமுள்ள உறவுமுறை பற்றிய அடுத்த விவாதமானது. இருவரும் ஒருவரை ஒருவர் சார்ந்திருப்பதாக விளக்குகிறது. ஆரம்பத்தில் தேவனுடைய கட்டளைப்படி உண்டான சிருஷ்டிப்பின் ஒழுங்கில் ஸ்திரீயானவள் புருஷனிலிருந்து உண்டாக்கப் பட்டவளாயிருந்த போதிலும், தொடர்ந்து உருவான மனிதவர்க்கமானது ஸ்திரீயின் மூலமே உலகத்தினுள் உண்டாக்கப்பட்டிருக்கிறது. ஆனபடியினால் முடிவு என்னவென்றால் புருஷன், ஸ்திரீ இருவரும் ஒருவரை ஒருவர் சார்ந்திருப்பது முக்கியமானது, என்றபோதிலும் முடிவாக சகலமும் தேவனிடமிருந்து வந்தது.

"ஸ்திரீயானவள் தேவனை நோக்கி ஜெபம் பண்ணுகையில், தன் தலையை மூடிக்கொள்ளாமலிருக்கிறது இலட்சணமாயிருக்குமோ? என்று உங்களுக்குள்ளே நிதானித்துக் கொள்ளுங்கள். புருஷன் மயிரை நீளமாய் வளர்க்கிறது அவனுக்குக் கனவீனமாயிருக்கிறதென்றும், ஸ்திரீ தன் மயிரை நீளமாய் வளர்க்கிறது அவளுக்கு மகிமையாயிருக்கிறதென்று சுபாவமே உங்களுக்குப் போதிக்கிறதில்லையா? தலைமயிர் அவளுக்கு முக்காடாகக் கொடுக்கப்பட்டிருக்கிறதே (கிரேக்க மூல வாக்கியத்தில், 'நீளமான மயிர் முக்காடிட்டுக் கொள்வதற்குப் பதிலாக அவளுக்குக் கொடுக்கப் பட்டிருக்கிறது' என இந்த சொற்றொடர் விளக்குகிறது).

"ஆகிலும் ஒருவன் வாக்குவாதஞ்செய்ய மனதாயிருந்தால், எங்களுக்கும் தேவனுடைய சபைகளுக்கும், அப்படிப்பட்ட வழக்கமில்லையென்று அறியக்கடவன்"

இன்னொரு மொழிபெயர்ப்பில் இந்த வசனங்கள் நீண்ட தலைமயிரை உடையவனாய் ஜெபம் பண்ணுகிற அல்லது தீர்க்க தரிசனம் கூறுகிற ஒவ்வொரு புருஷனும் தன் தலையை கனவீனப்படுத்துகிறான். மேலும் தன் தலையை மூடிக்கொள்ளாது ஜெபம் பண்ணுகிற அல்லது தீர்க்கதரிசனம் கூறுகிற ஒவ்வொரு ஸ்திரீயும் தலையை கனவீனப்படுத்துகிறாள் .... அவள் "தலை சிரைக்கப்பட்ட பெண்களில்" ஒருவளைப் போலிருக்கிறாள். ஒரு ஸ்திரீ தன் தலையை மூடிக்கொள்ளாமலிருந்தால், அவள் குட்டையான தலை மயிரை கொண்டவளாய் இருக்கட்டும், ஆனால் ஒரு ஸ்திரீ தன் தலை மயிரைக் கத்தரித்து அல்லது சிரைத்துக் கொண்டிருப்பது அவளுக்கு வெட்கமாயிருக்கிறபடியால், அவள் மறுபடியும் தன் தலைமயிரை வளர்த்துக் கொள்ளக்கடவள். ஒரு புருஷன் இவ்விதமாக நீளமான தலைமயிரை உடையவனாயிருக்க வேண்டியதில்லை எனக் குறிப்பிடப்படுகிறது" (The Narrated Bibe, F.Lagand Smith)

இதன் முழுப்பகுதியும் "மூடப்பட்டிருத்தல்", "மூடப் படாதிருத்தல்" மற்றும் "மூடிக்கொண்டிருத்தல்" என்பதாக விளக்குகிறது. அதாவது ஸ்திரீயினது தலை முழுவதும் மூடப்பட்டிருக்க வேண்டும். ஆனால் மூல கிரேக்கபாஷையானது ஸ்திரீகள் அணிந்து

கொள்வதற்குரிய முக்காட்டுத் துணியை பற்றி பேசவில்லை. இது ஒரு செயற்கை முக்காடு - ஒரு வஸ்திரம் நூற்றாண்டுகளினூடே பல்வேறுபட்ட சமயப் பாரம்பரியங்களுக்கு எச்சரிக்கையாயிருக்கும்படி மூல வாக்கியத்தில் "குறிப்பிடப்பட்டு" உள்ளது. இந்தக் காரியத்தைக் குறித்துப் படிக்கின்ற வேளையில் நமது மனதிலிருந்து இப்படிப்பட்டதான பாரம்பரியங்களை முழுவதும் தள்ளிவிட்டு உண்மையிலேயே வேதாகமத்தில் என்ன எழுதப்பட்டிருக்கிறது என்பதற்கு நெருக்கமான கவனம் செலுத்துவோம்.

வசனம் 15 விளக்குகிறது, "ஸ்திரீ தன் மயிரை நீளமாய் வளர்க்கிறது அவளுக்கு மகிமையாயிருக்கிறது; தலைமயிர் அவளுக்கு (முக்காடிடுவதற்குப் பதிலாக) முக்காடாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது". தேவன் எதிர்பார்க்கிறபடி அவள் முழுவதும் மூடிக்கொண்டிருக்கத் தக்கதாக அவளுடைய நீண்ட தலைமயிரானது கொடுக்கப் பட்டிருக்கிறது. முக்காட்டிற்குப் பதிலாக அவளது தலைமயிரே ஒரு இயற்கை முக்காடாக கொடுக்கப்படுகிறது. இந்த குறிப்பான வசனத்தில் 'முக்காடிட்டுக் கொண்டிருத்தல்' என்ற வார்த்தைக்கு கிரேக்க வார்த்தை முக்காடாகும். தையர் என்பவருடைய 'Greek - English Lexicon' -ல் 'சுற்றிலும் தொங்கலான துணியாலான முக்காடு என விளக்கப்படுகிறது. ஆர்வமிக்க இந்த வார்த்தை "துணியாலான முக்காடே பயன்படுத்தப்பட்டதாக இந்த வசனத்தில் குறிப்பிடப்படுகிறது. இந்தக் கூற்று, ஸ்திரீயினது நீளமான தலைமயிரானது முக்காட்டிற்குப் பதிலாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதாகும்.

*- தொடரும்*

**தமிழில் : *J.* குளோரி அர்ஜுனன்**

# தெரிந்து கொள்ளுங்கள்

## சாத்தான் – எதிர்த்து நிற்கும் ஆவியை உடையவன்




1. சாத்தானும் அவனுடைய தூதர்களும் வானத்திலிருந்து கீழே தள்ளப்பட்டவர்கள் (வெளி. 12:9).
   இயேசு ... "சாத்தான் மின்னலைப் போல வானத்திலிருந்து விழுகிறதைக் கண்டேன்" (லூக். 10:18).
2. சாத்தான் என்பவன், தேவனுக்கும் மனிதனுக்கும் பகைஞனாய் எப்பொழுதும் எதிர்த்து நிற்பவனுமாய் இருக்கிறான்.
   மனிதனை சோதனைக் குள்ளாக்கி தேவனுக்கு கீழ்படியாமல் போகச் செய்கிறவன். சிங்கம் போல் எவனை விழுங்கலாமோ என்று வகைதேடிச் சுற்றித் திரிகிறான் (1 பேது. 5:8).
3. சாபமாகிய சாத்தான் ஆதாம் ஏவாளை சோதித்து தேவனுடைய கட்டளையை மீறச் செய்தான்.
   தேவனுடைய சட்டத்தை மீறுவது பாவம் (1 யோ. 3:4).
4. பாவம், மரணம், சோதனை, அழிவு, இவை எல்லாவற்றிற்கும் சாத்தான் காரணமானவன் (எப. 6:11–13; யாக் 1:15; யோவா 10:10).
5. பிசாசானவன் நம்மை உண்டாக்கினவரை எதிர்த்து நிற்கும்படி தூண்டிவிட்டு, நாம் அழிந்து போவதற்கு காரணமாய் இருக்கிறான் (அப். 5:3–10).

***- Selected***

# பாவத்தோடு நமது சிக்கலான நிலை

**- Roger Dickson**


**பா**வத்தோடு தங்களுக்குப் பிரச்சனை உண்டு என்பதை நேர்மையுள்ளமக்கள் அறிவர். என்ன காரியங்களை செய்திருந்த போதிலும் தேவனுக்கு நேராக நல்மனசாட்சியை பெறும்படிக்கு அவர்களது பாவப்பிரச்சனை மீட்புக்காக அவர்களது சுய பரிகாரங்களை தேடுகிறார்கள். பாவத்திற்குப் பரிகாரம் காணும் படிக்கும் சமய நடவடிக்கைகளை சரி செய்து கொள்ளும்படிக்குமான இந்த முயற்சியில் மக்கள் இரு முக்கியமான காரியங்களை அடிக்கடி மறந்து போயிருக்கின்றனர். அவைகள் பின்வருவன.




**A. நற்கிரியைகளினால் ஒருவன் தேவனுடைய இரட்சிப்பை வாங்க முடியாது.**

ஒருவேளை நீங்கள் யாரிடமாவது அதிகக் கடன்பட்டிருப்பீர்கள். ஒவ்வொரு நாளும் வேலை செய்து இக்கடனை திரும்ப செலுத்த தேவையான பணத்தைச் சம்பாதிப்பதற்கு ஐநூறு ஆண்டுகள் எடுக்கலாம். இந்தக் கடனை திரும்பச் செலுத்த உங்களால் முடியுமா? நிச்சயமாக முடியாது. நீங்கள் சரீரத்தில் வலிமையுடையவராயிருந்தால், என்பது அல்லது தொண்ணூறு வயது வரை உயிர் வாழவீர்கள். உங்களுடைய மரண நேரத்தில் எப்படியும் நீங்கள் கடனில் தான் இருப்பீர்கள். இவ்வாறாக கடனை திரும்பிச் செலுத்தும் படிக்கு 500 ஆண்டுகள் நீங்கள் தனித்து உழைப்பதற்கு சாதகமான வழி கிடையாது.

இப்போது தேவன் ஒருவேளை உங்களுக்கு ஒரு பெரிய அன்பளிப்பைக் கொடுப்பாரானால் அதன் கிரயத்தை நீங்கள் திருப்பிச் செலுத்த உங்களுக்கு வழியே இருக்காது. ஏற்றுக் கொள்ளக் கூடிய தான தேவனுடைய நிபந்தனைகளின்படி அந்த அன்பளிப்பை ஏற்றுக் கொண்டு "நான் எவ்வளவு திருப்பிச் செலுத்த கூடுமோ அதைக் காட்டிலும் நான் இப்போது கடன்பட்டிருப்பது எவ்வளவு அதிகம்" என்று கூறுவீர்கள். நீங்கள் கூறுவது சரியே. அன்பளிப்புக்கான கிரயத்தை தேவனுக்கு நீங்கள் திரும்பச் செலுத்த முடியாது.




ஒரு அரசனிடம் பத்தாயிரம் தாலந்து கடன்பட்டிருந்த ஒரு மனிதனைப் பற்றிய உவமையை நினைவு கூருங்கள் (மத் 18:23-35) அங்கு

அவனது கடனை அவன் திரும்பச் செலுத்துவதற்கான வழி இல்லை. அவனது கடனைச் செலுத்தும்படிக்கு அவன் அழைத்து வரப்பட்ட போது, அவன் அரசனுக்கு முன்பாக தாழ விழுந்து, வணங்கி தனது விடுதலைக்காக அவனை நோக்கி வேண்டிக்கொண்டான். அரசன் மனதிரங்கி, அவனை விடுதலை பண்ணி, கடனையும் மன்னித்து விட்டான்.

தேவனோடுள்ள நமது ஐக்கியம் இதைப்போன்றது தான். நமது பாவங்கள் மன்னிக்கப்படுவதற்காக தேவனுக்கு நாம் கிரயம் செலுத்த முடியாது. **நாம் செலுத்த கூடிய தொகையைக் காட்டிலும் நாம் கடன் பட்டிருப்பது அதிகம்.** இவ்வாறாக நாம் தண்டிக்கப்பட்டுள்ளோம். ஆனால் நாம் எவ்வாறு மன்னிப்பைப் பெறுவோம்? நாம் மன்னிப்பைப் பெறும் போது, நாம் எவ்வாறு தேவனுக்கு திரும்பச் செலுத்துவோம்?

சில மதப்பற்றுள்ள மக்கள் தங்கள் நற்கிரியைகள் மூலம் தேவனுக்கு செலுத்த முடியும் என நம்புகின்றனர். வேறு வார்த்தைகளில், அவர்கள் நற்கிரியைகள் செய்வதன் மூலம் தங்களுக்காக தேவனை கடனாளியாக்க முடியும் என நம்புகின்றனர், அவர்களது மன்னிப்பை அவர்களுக்குக் கடனாக கொடுக்கும் படி அது தேவனை மாற்றும் என நம்புகின்றனர். ஆனால் உண்மை என்னவென்றால் தேவனிடமிருந்து இரட்சிப்பைப் பெறும்படி போதுமான நற்கிரியைகளைச் செய்வதற்கு ஒருவன் நீண்ட காலம் வாழமுடியாது. இரட்சிப்பிற்காக தேவனுக்கு திரும்பச் செலுத்துவது போல ஒரு கிரியை செய்யவும் முடியாது. ஏனென்றால் அவர் கீழ்ப்படிதலுள்ள விசுவாசத்தில் நடக்கிற ஒருவனுக்கு அதைக் கொடுக்கிறார்.

ஒருவனோ அல்லது ஒருத்தியோ தேவனிடமிருந்து தங்களது இரட்சிப்பை தங்களது நற்கிரியையினால் பெறலாம் என நினைத்தால் அது அவர்களையே ஏமாற்றிக் கொள்வதாகும். தேவன், நீங்கள் இரட்சிப்பைப் பெறும்படிக்கு தேவையான கிரயத்தை செலுத்துவதற்கு உங்களால் போதுமான நற்கிரியைகளைச் செய்ய முடியாது எனக் கூறுகிறார். ஏனென்றால் அவர் அந்தக் கிரயத்தைச் செலுத்தக் கூடியவராயிருக்கிறார். நீங்கள் ஓராயிரம் ஆயுட்டகாலம் வாழ்ந்திருந்தாலும், இன்னும் இரட்சிப்பிற்கான கிரயத்தை உங்களால் செலுத்த முடியவில்லை. இரட்சிப்பைப் பெறுவதற்கு நற்கிரியைகளை செய்து கொண்டிருந்தாலும், கிரயம் செலுத்துகிறதான சந்தர்ப்பத்தை நீங்கள் பெற்றிருக்கவில்லை.

கருத்து என்னவென்றால் நமக்கு நித்திய இரட்சிப்பைக் கொடுக்கும்படி தேவனை கடனாளியாக்க நம்மால் கூடாது. நாம் தேவனை ஒரு கடனாளியாக்க முடியாது. ஆனபடியால், நாம் இறுதி நியாயத்தீர்ப்பில் நின்று கொண்டு, நமது நற்கிரியையினிமித்தம் தேவனிடமிருந்து பரலோகத்தை உரிமை பாராட்ட நாம் தகுதியுடையவர்களாயிருக்க மாட்டோம். எந்த மனிதனின் முயற்சியினாலும் சம்பாதிப்பதற்கு இந்த அன்பளிப்பானது மகா பெரியதாயிருக்கிறது. எனவே இதைப் பெறுவதற்கு போதுமான

நற்கிரியைகளை செய்ய முடியாத ஒருவனால் எப்படி இதைப் பெறமுடியும்? இதன் விடை தேவனுடைய ஈவு ஆகும்.

**B. நாமனைவரும் தேவனுடைய நியாயப்பிரமாணத்திற்கு விரோதமாய் பாவஞ் செய்கிறோம்.**

இரண்டாவது காரியம், தேவனுடைய கற்பனைகளின்படி வாழ்கின்ற ஒருவன் அல்லது ஒருத்தி நல்லவர்களாய் இருப்பதின் அடிப்படையில் இரட்சிப்பை உரிமை பாராட்ட முடியும் என்ற மார்க்க பக்தியில் தவறாக வழிநடத்தப்பட்டவர்களின் விசுவாசத்தை அடையாளம் காண்பிக்க. சிலர் தாங்கள் நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்படிகின்றபடியினால் தாங்கள் நல்லவர்கள் என நினைக்கலாம். எப்படியிருப்பினும், ஒரு பாவமானது ஒரு பாவியை உருவாக்குகிறது. யாக்கோபு, "எப்படியெனில், ஒருவன் நியாயப்பிரமாணம் முழுவதையும் கைக் கொண்டிருந்தும், ஒன்றிலே தவறினால் எல்லாவற்றிலும் குற்றவாளியிருப்பான்" (யாக். 2:10) எனக் கூறுகிறார். நியாயப் பிரமாணத்தின்படி நீ உன்னை நல்லவன் என நினைத்து, ஒரு கற்பனையை மீறினால் அந்த கற்பனையானது ஒரு பாவியாக உன்னை தீர்க்கிறது. ஆனபடியினால், "இயேசு கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தினாலேயன்றி, நியாயப் பிரமாணத்தின் கிரியைகளினாலே மனுஷன் நீதிமானாக்கப்படுவதில்லை நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினாலே எந்த மனுஷனும் நீதிமானாக்கப்படுவதில்லையே" (கலா. 2:16) மேலும் வேதாகமம், "....... எந்த மனுஷனும் நியாயப் பிரமாணத்தின் கிரியைகளினாலே தேவனுக்கு முன்பாக நீதிமானாக்கப்படுவதில்லை......" (ரோம. 3:20) எனக் கூறுகிறது. தேவனுக்கு முன்பாக ஒருவனும் நீதிமான் என அழைக்கப்படாததற்குக் காரணம், நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்ளும்படி முயற்சிப்பது உண்மையானாலும் எல்லாரும் தேவனுடைய நியாயப்பிராமணத்தை மீறுகிறவர்களாய் "..... நீதிமான் ஒருவனாகிலும் இல்லை" (ரோம. 3:10) பாவத்தின் சம்பளம் ஆவிக்குரிய மரணமாகும். (ரோம. 6:23) இந்தக் காரணத்தினால் நியாயப் பிரமாணத்தை முழுமையாகக் கைக்கொள்வதின் மூலம் ஒருவனும் தேவனுக்கு முன்பாக நீதிமானாயிருக்க முடியாது.

## மரணத்திற்கு நியமிக்கப்பட்டவர்கள்

நமது நற்கிரியைகளினால் நாம் நமது இரட்சிப்பை சம்பாதிக்க முடியாது. பாவமற்றவர்களாய் நாம் தேவனுடைய நியாயப்பிராமாண முழுமை முழுமையையும் கைக்கொள்ள முடியாது. இவ்வாறாக நாம் நமது பாவத்தினிமித்தம் தேவனிடமிருந்து நித்தியமாகப் பிரிக்கப்பட்டவர்களாயிருக்கும்படி தேவனுடைய நியாயப் பிரமாணத்தினால் குற்றவாளியாக தீர்க்கப்பட்டுள்ளோம். பாவத்தின் பிரச்சனைக்கு மனிதனால் அல்ல, தேவனால் அருளப்பட்டுள்ள பரிகாரம் இல்லையென்றால் நாம் தண்டனைக்குள்ளனவர்களாயிருப்போம்.

தண்டனைக்குரிய நமது பாவமிக்க நிலையினை அடையாளம் கண்டு கொள்வதில், நாம் ஒவ்வொருவரும் பவுல் அறிக்கையிட்டது போல "நிர்ப்பந்தமான மனுஷன் நான்! இந்த மரண சரீரத்தினின்று யார் என்னை விடுதலையாக்குவார்? (ரோம. 7:24) என அறிக்கையிடுகிறவர்களாய் இருக்க வேண்டும். இந்தக் கேள்விக்குரிய பதிலானது நமது சுயசமயக் கண்டுபிடிப்பில் அல்லது மன்னிப்பைக் கண்டுகொள்ளும்படிக்கு நமது சுய முறைகளில் இல்லை. தேவனுக்கு விரோதமாக பாவத்தில் ஜீவிக்கும் போது ஒரே பரிகாரமாக தேவனுடைய பரிகாரமே உண்டு. தேவனுடைய பரிகாரத்தைக் கண்டு பிடிப்பதற்கான ஒரே வழி வேதாகமமே.

**தற்சோதனை**

1. _____ தேவனுடைய இரட்சிப்பை ஒருவன் இதன் மூலம் பெறமுடியாது. ............... (A) விசுவாசம் (B) நம்பிக்கை (C) நற்கிரியை
2. ____ நமது நற்கிரியைகளின் மூலம் நமது இரட்சிப்பைப் பெறவிழைவோமானால், தேவனை எப்படிப்பட்டவராயிருக்கப் பண்ணுகிறோம்? (A) நமது கடனாளியாக (B) நமது பிதாவாக (C) நமது இரட்சகராக
3. ____ ஒரு பாவம் ஒருவனை இவ்விதமாக உருவாக்குகிறது ..................... (A) விசுவாசியாக (B) பாவியாக (C) பரிசுத்தவானாக
4. _____ நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினால் ஒருவன் இவ்விதமாக இல்லை ..................... (A) கீழ்ப்படிந்தவனாக (B) நீதிமானாக (C) புகழ்ப்பட்டவனாக
5. _____பாவத்தின் சம்பளம் ஆவிக்குரிய ..................... (A) ஜீவன் (B) மரணம் (C) சீர்திருத்தம்

ஆம் / இல்லை : நீ தேவனுடைய நியாயப்பிரமாணம் முழுமையும் கைக்கொள்ள முடியாததால், உன்னுடைய பாவத்தைச் சரி செய்ய நற்கிரியைகளைச் செய்யவுமில்லை, ஆனபடியால், இரட்சிக்கப்படுவதற்கு நீ செய்ய வேண்டியது என்ன எனக் கண்டுபிடிக்கும்படி நீ தேவனிடத்திற்கும் அவரது வார்த்தைக்கும் நேராக திரும்புவது அவசியமா?

**வேதவாசிப்பு** : ரோம.. 3 :4; கலா. 2,3

**வேதஆராய்ச்சி** : பாவமும் மரணமும் : ஏசா. 59:1,2; ரோம.. 5:8–21; 6:23, பாவமும் நியாயப் பிரமாணமும் : எசே. 18:20; ரோம. 14:23; யாக். 4:17; 1 யோவா. 3:4, நற்கிரியைகள் : ரோம. 3:27, 28; 4:1–5; 11:6, எபே. 2:8–10

விடை 12ம் பக்கம் பார்க்கவும்

**ஜெபியுங்கள்**

1. நமது மாத இதழுக்கு RNI பதிவு கிடைக்க.
2. உலக அமைதிக்காக.
3. வாசகர்களுடைய சுகத்திற்காக.

# அந்த வார்த்தை . . . .

ஆதியிலே
வாழ்க்கை இல்லை
ஆனால்
வார்த்தை இருந்தது,
அந்த வார்த்தை தேவனின்
சொந்த வார்த்தை.
வார்த்தையாகவே இருந்த
தேவன்தான்
வானத்தையும் பூமியையும்
படைத்தார்.
அவரால் உண்டாகாத ஒன்று
அவனியில் இல்லை.
ஜீவன்களுக் கெல்லாம்
ஜீவன் தந்த தேவனுக்குள்
ஜீவன் இருந்தது.
அவருக்குள் இருந்த
ஜீவன்
விழியிருந்தும் வழி தெரியா
மானிடர்க்கு
ஒளியாய் இருந்தது.
அந்த ஒளியில் இருந்த
அருள் கண்ட
இருள் இருண்டு போனது.
ஆம் ... மிரண்டு போனது.
அது
சாதாரண ஒளி அல்ல
சாதாரண மனிதனையும்
சிலிர்க்க வைக்கும் ஒளி.
புதியவனாய்
துளிர்க்க வைக்கும் ஒளி.
தாம் உருவாக்கிய
உன்னத உலகத்திலிருந்த
அந்த உன்னதமானவரை
உலகம் அறியவில்லை .... ஆம்
புரியவில்லை.

உலகத்தையே சொந்தமாக்கிய
தேவனை
உலகத்துச் சொந்தங்களோ
சொந்தமாக்கிக் கொள்ள
தயாராயில்லை.
தேவனால்
சுவாசம் பெற்றவர்கள்
சுவாசம் உள்ளவர்களாய்
இருந்தார்களே தவிர
(வி)சுவாசம் உள்ளவர்களாய்
இல்லை.
தேவனை ஏற்றுக்
கொண்டவர்களோ
தூற்றுதலுக்குள்ளாக வில்லை
போற்றுதலுக்கு உள்ளானார்கள்.
ஏற்றுக் கொள்ளாதவர்கள்
தேவனின்
பிள்ளை என்று சொல்லும்
அருகதை இல்லாமல்
அவதிக் குள்ளானார்கள்
ஏற்றுக் கொண்டவரோ
ஏற்றம் பெற்றார்கள்.
அவர்கள்
இரத்தத்தினாலோ, மாம்ச
சித்தத்தினாலோ, புருஷ
சித்தத்தினாலோ பிறக்காமல்
தேவனின்
முத்தத்தினால் பிறந்தார்கள்.
அந்த வார்த்தை மாம்சமாகி
தோஷமுள்ளவர்கள்
நாசமாகிடாமல், தேவன்
பாசமுள்ளவராய்
நேசமுள்ளவராய் நமக்குள்
வாசம் பண்ணினார்.

– சாம் நடராஜன்
கோத்தகிரி

பொருள் : வாழும் விசுவாசம்
ஆக்கியோன் : யாக்கோபு (அப்போஸ்தலனல்ல)
மாற் 6:3, 1 கொரி. 15:7 கலா 1:19, யூதா. 1
காலம் : கி.பி. 45

**திட்டவரைக் குறிப்பு :**

1. சோதிக்கப்பட வேண்டிய விசுவாசம் அதி. 1
2. நிருபிக்கப்பட வேண்டிய விசுவாசம் அதி. 2
3. அறிவிக்கப்பட வேண்டிய விசுவாசம் அதி. 3, 4
4. பயிற்சி பெற வேண்டிய விசுவாசம் அதி.5

**சிறப்புச் செய்தி :**

இது ஒரு புதிய ஏற்பாட்டு நீதிமொழிகள் எனலாம்
"ஈக்கு தலையில் விஷம், மனுஷனுக்கு உடம்பெல்லாம் விஷம்" என்பர்
ஆனால் யாக்கோபு சொல்கிறார்

1. நாவும் நெருப்புத்தான்!
2. அது அநீதி நிறைந்த உலகம்!
3. முழுச்சரீரத்தையும் கறைப்படுத்தும்!
4. ஆயுள் சக்கரத்தை கொளுத்தும்!
5. பெருமையானவைகளைப் பேசும்!
6. மனுஷனால் அடக்கக் கூடாதது!
7. பொல்லாங்குள்ளது! - 3:2-10

**வரலாற்று பின்னணி :**

கிரியை அற்ற விசுவாசம் செத்தது, செத்த சிங்கத்தை விட உயிருள்ள நாய் மேலானது

விசுவாசம் செயல்பட வேண்டும்
விசுவாசம் வெளிப்பட வேண்டும்
விசுவாசம் காணப்பட வேண்டும்
விசுவாசம் சோதிக்கப்பட வேண்டும்
(ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள் போல)

ரோமர் 4ம் அதிகாரத்தில் பவுல்; ஆபிகாம் விசுவாசத்தினாலே நீதிமானாக்கப்பட்டான் கிரியைகளினால் அல்ல என்கிறார்.

ஆனால்

யாக்கோபு 2ம் அதிகாரத்தில் யாக்கோபு; ஆபிரகாம் கிரியைகளினாலே நீதிமானாக்கப்பட்டான் என்கிறார்.

அப்படியானால், மேற்கூறிய இருவரும் கருத்து வேறுபாடு உடையவர்களா?

இல்லை, தேவனுக்கு முன்பாக மனிதன் கிரியை ஒன்றுமில்லை (எபே. 2:8, 9) ஆனால்

நீதிமானாக தீர்க்கப்பட்ட மனிதன் தன் கிரியையை தேவனுக்கு முன்பாக செயல்படுத்திக் காண்பிக்க வேண்டும்..

*– Selected*

# வேத அறிவுப் போட்டி எண். 5

**குறிப்பு :**

**வேத அறிவுப் போட்டியில் கலந்து கொள்ளும் ஒவ்வொருவரும் அஞ்சல் அட்டையில் கீழ்கண்ட கேள்விகளுக்கு வேத வசன ஆதாரத்துடன் விடைகளை இம்மாதம் இறுதிக்குள் எழுதி அனுப்புங்கள். அத்துடன் உங்கள் பதிவெண்ணையும் மறக்காமல் எழுதுங்கள். 12 போட்டியில் வெற்றி பெற்று முதலாவது வருபவருக்கு சிறப்பான பரிசு காத்திருக்கிறது. தயவு செய்து உங்கள் சுயமுயற்சியில் கண்டு பிடியுங்கள்.**

1. மினாசோன் என்ற பழையசீஷன் எந்த தீவைச் சேர்ந்தவன்?
2. முதலாவது யார் உருவாக்கப்பட்டான்?
3. அவர் யூதரிலிருந்து மாத்திரமல்ல, எந்த ஜாதிகளிலுமிருந்து நம்மை அழைத்திருக்கிறார்?
4. தண்ணீர்கள் உடைந்தோடுகிறது போல, தேவன் என் கையினால் என் சத்துருக்களை உடைந்தோடப்பண்ணினார் என்றவன் யார்?
5. என் தகப்பன் வீட்டில் நான் எல்லாரிலும் சிறியவன் என்று கர்த்தருக்கு மறு உத்தரவு கொடுத்தவன் யார்?
6. எந்த உடன்படிக்கையின் ஊழியக்காராயிருக்கும்படி, அவரே எங்களைத் தகுதியுள்ளவர்களாக்கினார் என்று பவுல் குறிப்பிடுகிறார்?
7. தன் மாம்சத்திற்கென்று விதைக்கிறவன் மாம்சத்தினால் எதை அறுப்பான்?
8. எத்தனை முறை என்னைப் பரீட்சை பார்த்த மனிதரில் ஒருவரும், அவர்கள் பிதாக்களுக்கு நான் ஆணையிட்டுக்கு கொடுத்த தேசத்தைக் காணமாட்டார்கள் என்றார்?
9. தேவனாகிய கர்த்தர் மனுஷனை ஏதேன் தோட்டத்தில் அழைத்துக் கொண்டு வந்து அதை என்ன செய்யும் படியாக வைத்தார்?
10. தன் வாசலை உயர்த்திக் கட்டுகிறவன் எதை நாடுகிறான்?

## நடப்புச் செய்திகள்

1. *மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்தின் 34-வது பட்டமளிப்பு விழாவில் விஞ்ஞானி அப்துல்கலாமுக்கு கவுரவ டாக்டர் பட்டம் வழங்கப்பட்டது.*
2. *1½ லட்சம் ஓட்டுப்பதிவு இயந்திரங்கள் வாங்க மத்திய அரசு 150 கோடி அனுமதி அளித்துள்ளது என்று மத்திய மந்திரி பிரமோத் மகாஜன் தெரிவித்துள்ளார்.*
3. *சீனாவிடம் இருந்து ஏவுகணை தொழில் நுட்ப ரகசியங்களை வாங்கியதற்காக பாகிஸ்தான் மீது அமெரிக்கா ஆயுதத் தடையை விதித்து உள்ளது.*
4. *சமையல் காஸ் பயன்படுத்தி வாகனங்களை ஓட்டுவதற்கு அனுமதி அளிக்க மத்திய அரசு முடிவு செய்துள்ளது. இது சம்பந்தமான வழிமுறைகள் வகுக்கப்பட்டு வருகின்றன என்று மத்திய அமைச்சர் ராம்நாயக் தெரிவித்துள்ளார்*
5. *கடந்த மூன்றாண்டுகளாக நிறுத்திவைக்கப்பட்டிருந்த இந்தியா கனடா விமான சர்வீசை மீண்டும் அடுத்த ஆண்டு அக்டோபர் மாத முதல் துவக்க திட்டமிடப்பட்டுள்ளது.*

Owned and published by B. Arjunan from 17.2.102D/5, Rajan Nagar, Batlagundu - 624 202. and Printed by V.D. Thankachan at Novelty Press, 3. Dhanappa Mudali street, Madurai-625 001.
**Editor : B. Arjunan.**

எங்களோடு சேர்ந்து தேவனை ஆராதிக்க அன்புடன் அழைக்கின்றோம்.



ஞாயிறு ஆராதனை : காலை 9.00 மணி

வியாழன் வேதவகுப்பு : மாலை 6.00 மணி

All are Welcome

**கிறிஸ்துவின் சபை**
17.2.102-D/5, ராஜன் நகர்
வத்தலக்குண்டு – 624 202.
திண்டுக்கல் மாவட்டம்
✆ : (04543) 23278

**Editor**
**THE WORD OF CHRIST**
Post Box No.5,
Batlagundu-624 202.

**Monthly Magazine**

**FOR FREE DISTRIBUTION ONLY**

# HEAR THE VOICE OF TRUTH

## ON RADIO SRILANKA ALL INDIA SERVICE

| LANGUAGE | DAY'S | TIME | ADDRESS | SPEAKER |
|---|---|---|---|---|
| **HINDI** | Sunday<br>Thursday | 8.45 p.m 9.00 p.m<br>9.00 p.m 9.15 p.m | Box. 3815<br>New Delhi - 110 049 | SUNNY DAVID |
| **ENGLISH** | Friday | 7.45 p.m 8.00 p.m | Box. 3815<br>New Delhi - 110 049 | J.C. CHOATE |
| **TELUGU** | Sun,Mon<br>Tue,Thu | 2.00 p.m 2.15 p.m | Box. 80<br>Kakinada - 533 001 | JOSHUA<br>GOOTAM |
| **TAMIL** | Sunday,<br>Tuesday,<br>Thursday<br>Friday | 6.45 p.m 7.00 p.m<br>5.30 p.m 5.45 p.m<br>5.45 p.m 6.00 p.m<br>5.30 p.m 5.45 p.m | Box. 8405<br>Bangalore - 560 084 | P.R. SWAMY |
| **MALAYALAM** | Friday | 3.45 p.m 4.00 p.m | Sunny Meads Lane,<br>Behind Sanskrit<br>College,<br>Trivandrum - 695 034 | P.K. VARGHESE |
| **KANNADA** | Sunday | 1.45 p.m 2.00 p.m | 3/5, 7th A Main, Tatasilk Farm<br>Bangalore - 560028 | ROBERT<br>RATHNAKAR |

Please write to these addresses for Bible Correspondence Course, Magazines and other Christian Literature in Language

ALL OF THESE PROGRAMMES ARE SPONSORED BY THE CHURCH OF CHRIST